1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி.S.பொன் மெலிசா, B.A., LL.B.,**
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் நாள் புதன்கிழமை

**<u>இ.ம.எண்.2/2024 அதன் அ.வ.எண்.446/2024</u>**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, V.M.சத்திரம், ஓயாசிஸ் பள்ளி எதிரில், ஸ்ரீஜெயந்தி நகர், கதவு எண்.70 என்ற முகவரியில் வசித்து வரும் சுப்பையா அவர்கள் குமாரர், இந்து, வயது 70 உள்ள பெருமாள்.

... மனுதாரர் / வாதி

–எதிர்–

சென்னை – 600 117, கீழக்கட்டளை, கோதாவரி தெரு, கதவு எண்.81 என்ற விலாசத்தில் குடியிருந்து வரும் K.ராமசாமி அவர்கள் குமாரர், இந்து, வயது சுமார் 48 உள்ள R.சங்கரவிஸ்வநாதன்.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது, அசல் வழக்கு முடியும் வரை மனு தபசில் சொத்துக்களை எதிர்மனுதாரர்/பிரதிவாதி அல்லது அவரது வகையாட்களோ மூன்றாம் நபர்களோ தபசில் சொத்திலிருந்து மனுதாரரை சட்டப்படி அல்லாமல் வேறு வகையில் காலி செய்யக்கூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 39, விதி 1,2 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள்; 07.11.2024

இம்மனு என்முன்பாக 04.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.சந்திரமோகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.I.பிரைட் தேவராஜ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவாணை**

1) இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.

2) செலவுத் தொகை இல்லை.

**தபசில்**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி –11, வி.எம்.சத்திரம், ஓயாசிஸ் பள்ளி எதிரில், ஸ்ரீஜெயந்தி நகர், கதவு எண்.70 உள்ள வீடும் அதில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு, மின் மோட்டார் உள்பட தபசில் விபரம் சரி.

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

PON MELISA S

Uploaded on 04.12.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.12.04 12:08:44 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.2/2024 அதன்**

**அ.வ.எண்.446/2024**

உத்தரவாணை

12.11.2025